

கீரப்பாளையம் முன்னாள் ஒன்றிய கழக செயலாளரும், (முன்னாள்) தலைமை செயற்குழு உறுப்பினரும், (முன்னாள்) மாவட்ட குழு உறுப்பினருமான பி.பூபாலன் அவர்கள் வயது முதிர்வின் காரணமாக இயற்கை எய்திதையொட்டி தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். உடன் கடலூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. துணைவியார் மறைவு!

## கட்சித் தலைவர்கள் – அமைச்சர்கள் – கழக முன்னணியினர் – கலையுலகினர் அஞ்சலி – ஆறுதல்!

சென்னை, ஆக. 22 -

கழகப் பொருளாளரும் மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு அவர்களின் துணைவியாரும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவின் தாயாருமான திருமதி. ரேணுகா தேவியின் மறைவுக்கு கட்சித் தலைவர்கள், கழக முன்னணியினர், அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், கலைத்துறையினர் உள்ளிட்டோர் அன்னாரது இல்லம் சென்று மறைந்த ரேணுகா தேவியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி டி.ஆர்.பாலு அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களுக்கு ஆறுதல் கூறி திருமதி. ரேணுகா தேவியின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தியவர்கள் வருமாறு: -

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் ஆர்.பாலகிருஷ்ணன், முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தர ராஜன், கலைஞானி கமலஹாசன் எம்.பி., 'இந்து' என்.ராம், நடிகர் சத்யராஜ், திவ்யா சத்யராஜ், டாக்டர் தணிகாசலம், சு.வெங்கடேசன் எம்.பி., லீ மெரிடியன் பெரியசாமி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ், மார்க்சிஸ்ட் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.ரெங்கராஜன், வை.செல்வராஜன் எம்.பி., சு.கல்யாணசுந்தரம் எம்.பி.

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, எஸ்.ரகுபதி, அர.சக்கரபாணி, கோவி. செழியன், சி.வெ.கணேசன், முன்னாள் அமைச்சர் க.பொன்முடி,

தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ, ஏ.கே.எஸ்.விஜயன், கம்பம் என்.செல்வவேந்திரன், விஜயா தாயன்பன்,

மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கே.கே.செல்லப் பாண்டியன், டாக்டர்.கௌதம சிகாமணி, கோவை தளபதி முருகேசன், காதர் பாட்ஷா (எ) முத்துராமலிங்கம்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. கிருஷ்ணசாமி, எழும்பூர் இ.பரந்தாமன், எஸ்.ஆர்.ராஜா, பட்டுக்கோட்டை அண்ணாதுரை, பேராவூரணி அசோக் குமார், பரமக்குடி முருகேசன்,

தஞ்சை மத்திய மாவட்ட பொருளாளர் எல்.ஜி.அண்ணா, முத்துப்பேட்டை எம்.எஸ்.கார்த்திக், திருவாரூர் அமுதா சேகர், பழஞ்சூர் செல்வம், மதுக்கூர் ரூஸ்வெல்ட் திருத்துறைப்பூண்டி பா. ஆடலரசன், அஞ்சுகம் பூபதி, ஆணைமலை அதிரடி அல்டாப், கோவை பாப்ப நாயக்கன்பட்டி ராஜேந்திரன், பொள்ளாச்சி முன்னாள் எம்.பி., சண்முக சுந்தரம், முன்னாள் அமைச்சர் மு.கண்ணப்பன் புதல்வர் மு.க. முத்து,

வழக்கறிஞர் வீரசேனன், (சன் டி.வி.) வீரபாண்டி, ஆடிட்டர் துரைராஜ், தாரேஸ் அகமது ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் கழக முன்னணியினர் ரேணுகாதேவியின் படத்திற்கு அஞ்சலி செலுத்தி கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் தகவல் தொழில்நுட்ப அணி, அண்ணா அறிவகம் ( DISTRICT FIREWALL) திறப்பு விழா விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் எஸ்.சுரேஷ் செல்வராஜ் கலந்து கொண்டு திறந்து வைத்தார். விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் துரை கி.சரவணன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில வழக்கறிஞர் அணி சுவை.சுரேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர்கள் எஸ்வெற்றிவேல், எஸ்.எஸ். ஜெயமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், கப்பூர் ராஜா, பி.கே.டி.முரளி, இரா.மைதிலி ராஜேந்திரன், கிளியனூர் கே.எஸ்.ராஜி, திருவக்கரை பாஸ்கர், வே.கணேசன், ச.புஷ்பராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நக்கீரன் இதழில் பணிபுரிந்த

# பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் மறைவு! ரூ.10 இலட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 22 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நக்கீரன் இதழில் பணியாற்றிய ஆர்.டி. சக்திவேல் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பத்து இலட்ச ரூபாய் நிதி உதவியாக அவரது குடும்பத்தாருக்கு வழங்க உத்தரவிட்டுள்ளார்.**

நக்கீரன் இதழில் பணிபுரிந்த பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் திண்டுக்கல் மாவட்டம் விளாம்பட்டியைச் சேர்ந்தவர். எளிய குடும்பத்தில் பிறந்தவர் சக்திவேல் என்றாலும், இவருடைய உழைப்பும் எழுத்தாற்றலும் சக்திவாய்ந்தவை,

"நக்கீரன்" இதழில் ஆர்.டி.எ(க்)ஸ் எனும் பெயரில் கட்டுரைகள் எழுதி, பாராட்டப்பட்டுள்ள எழுத்தாளர் ஆர். டி.சக்திவேல் சினிக்கூத்து என்ற பெயரில் சினிமா செய்திகளை தொடர்ந்து எழுதிவந்துள்ளார். அரசியல் செய்திகள், இலக்கியப் படைப்புகள், கவிதைகள் என அவருடைய எழுத்து பல பரிமாணங்களைக் கொண்டது.

கடந்த 6 ஆண்டுகளாகவே உடல் நலம் குன்றியிருந்த பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் தொடர்ச்சியாக சிகிச்சை மேற்கொண்டும் பலனின்றி இயற்கை எய்தியுள்ளார் என்பதை அறிந்து மிகவும் வருந்துகிறேன்.


ஆர்.டி.சக்திவேல் அவர்களின் மறைவு பத்திரிகை உலகிற்கு மிகப் பெரிய இழப்பாகும். அன்னாரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், பத்திரிகை உலக நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த பத்திரிகையாளர் ஆர். டி.சக்திவேல் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

20 - ஆம் ஆண்டு நினைவு நாள்





மொழிப்போர் தியாகி, மக்கள் தொண்டர்

மறைதிரு. **க.சொ.கணேசன்** Ex.MLA அவர்கள்

தோற்றம் : 03-06-1941 | மறைவு : 22-08-2005

"ஜெயங்கொண்டம் பகுதியில் பல எதிர்ப்புகளையும், இழப்புகளையும் சந்தித்து, எது நேர்ந்தபோதும் கழகப் பணியில் பின்வாங்காது நின்ற **கொள்கைவாதி, சிறந்த செயல்வீரர்!**"

செப் - 06 - 2005

என்றும் உங்கள் இலட்சிய பாதையில் பயணிக்கும்...

**க.சொ.க.கண்ணன்** M.Com.,

சட்டமன்ற உறுப்பினர் - ஜெயங்கொண்டம்,

தமிழ்நாடு சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வுக்குழு உறுப்பினர்,

ஒன்றிய கழக செயலாளர் - தா.பழூர் (கிழக்கு).

மற்றும் குடும்பத்தினர்கள்

**ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி தி.மு.க**

**அரியலூர் மாவட்டம்.**

### நன்னியூர், கடம்பன்குறிச்சி ஊராட்சிகளில்

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## நலத்திட்ட உதவிகளை வி.செந்தில்பாலாஜி வழங்கினார்!

*கரூர், ஆக.22 -*

*நன்னியூர், கடம்பன் குறிச்சி ஊராட்சிகளுக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.*

*கரூர் மாவட்டம் மண்மங்கலம் வட்டம். நன்னியூர் மற்றும் புஞ்சை கடம்பன்குறிச்சி ஆகிய ஊராட்சிகளுக்கு துவரப் பாளையம் சமுதாயகூடத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்றது. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் வகித்தார். 10 பயனாளிகளுக்கு ரூ. 23.10 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்.*

*பின்னர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மக்களிடம் சிறந்த வரவேற்பை பெற்ற ஒரு உன்னதமான திட்டமாக "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் அமைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமானது 179 இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு 19.08.2025 வரை 66 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இம்முகாம்கள் மூலம் இது வரை 53.564 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இதில் 19.705 மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஆகும். மனுக்களுக்கு சில நிமிடங்களில் அந்த முகாம்களிலேயே தீர்வு அளிக்கப்படுகிறது. ஒரு சில மனுக்களுக்கு ஒரு வார காலம் எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து மனுக்களுக்கும் 45 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் ஆணைகளை வழங்கியுள்ளார்கள்.*

*முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 45 நாட்களுக்குள் அனைத்து மனுக்களுக்கும் தீர்வு காண நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன இவ்வாறு அவர் கூறினார்.*

*இதனைத் தொடர்ந்து வருவாய்த் துறையின் சார்பாக 10 நபர்களுக்கு சாதிச் சான்று, வருமானச் சான்று இருப்பிடச் சான்று, விதவைச் சான்று மற்றும் பட்டா மாறுதல் உள்ளிட்ட சான்றிதழ்களையும், ஊரக வளர்ச்சித்துறையின் சர்பில் 3பேருக்கு சொத்துவரி பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும், எரிசக்தி துறையின் சார்பாக இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணை, கூட்டுறவுத் துறையின் சார்பாக 2 மகளிர் உதவிக் குழுவினருக்கு ரூ 23.10 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளும் என மொத்தம் 16 நபர்களுக்கு ரூ.23.10 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி வழங்கினார்.*

### தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணியின் திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - வெ. லோகநாதன் 5/362, நம்பியாம்பாளையம், திருப்பூர் - 641670.

துணை அமைப்பாளர்கள் - 1) சி. கந்தசாமி 2/6, பட்டம்பாளையம், திருப்பூர் - 638458. 2) கு. பழனிச்சாமி 6/47, பொன்னேகவுண்டன்புதூர், அன்னூர் - 641107, திருப்பூர் மாவட்டம். 3) க. பொன்னுசாமி 3/91, சின்ன ஓலம்பாளையம், அவிநாசி, திருப்பூர் - 641654. 4) என். தேவராசு 3/42, மங்கரசு, வலையன்பாளையம், திருப்பூர் - 641655. 5) அ. பழனிச்சாமி 8/326, அம்மன் நகர் வடக்கு, பூலுவப்பட்டி, திருப்பூர் - 641602.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20-08-2025.

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

# தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம்! திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம் 24.8.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், கிருஷ்ணகிரி, "தேவராஜ் மகாலில்" எனது தலைமையில்;

**கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., சிறப்புரையாற்றிட;**

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் வர்த்தகர் அணி பட்டியல் பெறுதல் மற்றும் கழக அணி வளர்ச்சி குறித்து.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை 18.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
*தி.மு.க. வர்த்தகர் அணி*